# தமிழ் இலக்கியங்களில் நூலகங்கள்

**அ. ஜான்சி ராணி**
ஆய்வியல் நிறைஞர், நூலகர்
புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தாமரைப்பாடி, திண்டுக்கல்

**மலர்:** 3
**சிறப்பிதழ்:** 4
**மாதம்:** மார்ச்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

தமிழ் இலக்கியங்கள் அன்று முதல் இன்று வரை பல தொன்றி விட்டன. நம் மொழியானது செம்மொழி தன்மையையும் பெற்றுவிட்டது. ஓலைச்சுவடியாக இருந்த பல நூல்களை உ.வே. சாமிநாதையர் தேடித் தொகுத்து இன்று நமக்குப் பல நூல்களைத் தந்துள்ளார். அதை நாமும் பாதுகாக்கவேண்டும். பாதுகாப்பதன் மூலம்தான் நம் மொழி, பண்பாடு பழக்கவழக்கங்கள், நாகரீகங்களை நாம் பாதுகாத்திட முடியும். பிற நாட்டவருக்கு நாம் முன்னோடியாகத் திகழ முடியும். எனவே நூல்களைப் பாதுகாக்க நூலகங்களை அரசு நமக்காக ஏற்படுத்தித் தந்துள்ளது. அதனை நாம் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க அறிவு மேலும் வளம் பெறும்.

## சமூகத்தில் நூலகத்தின் பங்கு

பதினெட்டாம் நூற்றாண்டிற்குள் தற்கால நூலகங்களைப் போல் சமூக சேவையில் நூலகங்கள் பங்கு மிகக் குறைவாக இருந்தது. அக்காலத்தில் நூலகங்களை புத்தக கிடங்குகள் என்றும் புத்தகங்களை பாதுகாக்கும் அகங்களாகவும் மக்கள் கருதினர். நூலகர் புத்தகங்களைப் பாதுகாக்கும் மனிதனாகக் கருதப்பட்டான். மேலும் நூலகங்களில் உள்ள நூல்கள் சங்கிலியால் இணைக்கப்பட்டு நூல்வைக்கும் அலமாரிகளுடன் பூட்டுப் போடப்பட்டிருந்தன. அந்நூல்களை அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகையினரும் அவர்களின் உறவினர்களும் மட்டுமே பயன்படுத்தினர்.

தற்கால நூலகங்கள் உலகளவில், தேசிய அளவில் மற்றும் உள்ளவில் மக்களுக்கு நூலகப் பணிகள் செய்கின்றன. தகவல் தொழில் நுட்பக் கருவிகளின் துணை கொண்டு தகவல் சேவையை உலக, தேசிய மற்றும் உள்ளவில் பரவச் செய்வதில் தற்கால நூலகங்கள் சமூகத்தில் பெரும் அங்கம் வகிக்கின்றன. நூலகங்கள் தகவல் பறிமாற்றம் செய்யும் நிலையங்களாகச் செயல்படுகின்றன. மேலும் நூலகர் தகவல் தரும் அச்சிட்ட ஆவணங்களை வாங்கி சீரமைத்து தகவல் சேவையை செய்வதில் ஈடுபட்டிருக்கிறார் என்பது தெரிகிறது.

## பொதுநூலகங்களின் அமைப்புமுறை

பொது நூலகம் என்பது பொதுமக்களுக்காக சாதி மத வேறுபாடின்றி நூலகச் சேவையை எல்லோரும் பெற அமைக்கப்பட்ட ஒரு சமூகமையம் பொதுநூலகமென்பது பொதுமக்களுக்காக உள்ளாட்சி ஆணைக்குழுவால் நூலகங்கள் அமைத்தும் பராமரித்தும் பல கிளைநூலகங்களையும் நடமாடும்

நூலகங்களையும் ஏற்படுத்தி நூலக சேவையானது செயல்பட்டு வருகிறது. பொது நூலகம் சமூக முன்னேற்றமடையச் செய்வதில் முக்கிய இடம் வகிக்கிறது. மக்களாட்சியை பாதுகாக்கவும் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் நாட்டு முன்னேற்றத்திற்காக பயன்படுத்தவும் நூலகம் உதவி புரிகின்றன.

**பொது நூலகங்களின் இயக்கங்கள்**

1. தகவல்
2. கல்வி
3. மனமகிழ் சேவை
4. பொழுது போக்கும் சேவை
5. ஆர்வமூட்டும் சேவை

மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக வேண்டிய பாடத்துறை நூல்களை வாங்கி அவைகளை கடன் கொடுத்து நூலகங்கள் கல்வி நிறுவனமாக இயங்குகின்றன. நல்வரலாற்று நூல்கள், வாழ்க்கை குறிப்பு நூல்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் சாதனைகளை விளக்கும் நூல்கள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து அவைகளை வழங்கி இளைஞர்களை நற்செயல்பாடு உடையவர்களாக மாற்ற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கல்விக்கூட நூலகங்களின் அமைப்பு**

பள்ளி நூலகம்
கல்லூரி நூலகம் மற்றும்
பல்கலைக் கழக நூலகம்

**பள்ளி நூலகம்**

பள்ளிக் கல்வியின் ஒரு பகுதி பள்ளிக்கூட நூலகமாகும். இதன் நோக்கம் மாணவர் மற்றும் ஆசிரியர் மக்களுக்கு கல்வி கற்கவும் போதிக்கவும் வேண்டிய நூல்களை வாங்கி அவர்களின் நூல் தேவையை நிறைவேற்றுவதேயாகும். மாணவர்களுடைய கல்வித்திறன் அதிகரிக்க வேண்டுமெனில் நூலகப்பழக்கம் ஏற்படுத்த வேண்டும். படிக்கும் மாணவர்கள் தங்கள் படிப்பிற்குரிய நூல்கள், பருவ இதழ்கள், தினசரி செய்தித்தாள்கள், அகராதி, கலைக்களஞ்சியம், படங்கள், பூகோளம், பேச்சுப்போட்டிக்கான பொது அறிவு நூல்கள் முதலியன வேண்டி நூலகங்களுக்கு வருபவர்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நூல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

**கல்லூரி நூலகச் சேவை**

**"நூல் இரவல் வழங்கும் சேவை**
**நூலகத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் சேவை**
**நூற்றொகைச் சேவை**
**குறிப்புத் தரும் சேவையும் தகவல் தரும் சேவையும்**
**வாசகர்களுக்கு ஆலோசனை தரும் சேவை**
**நூலக விரிவாக்கச் சேவை**
**முன் பதிவு நூல் சேவை**
**புதிய தகவல்களைப் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் சேவை**
**தேர்ந்தெடுத்த தகவல் பரப்பும் சேவை**

தனிப்பட்ட வாசகர்களுக்கான ஆராய்ச்சியில் உதவும் சேவை நகல் எடுக்கும் சேவை முதலிய சேவைகளை கல்லூரி நூலகம் செய்கிறது."

**பல்கலைக்கழக நூலகம்**

பல்கலைக்கழக நூலகம் உயர்கல்விக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்நோக்கம் அறிவை பாதுகாத்தும் வளர்த்தும் வருதல். கிடைக்கும் பாடத்துறை அறிவை கற்பிக்கும் வழியில்

மற்றவர்களுக்குக் கிடைக்கும் படி செய்தல், விரிவாக்கப் பணி மூலம் பல்கலைக்கழக பணிகளை அறிவித்தல், ஆராய்ச்சி செய்து அவைகளை விவாதித்தல் போன்றவைகளை அறிவிப்பதாக பல்கலைக்கழக நூலகம் திகழ்கின்றது. கல்விக்கூட நூலகங்கள் கல்வியின் தரத்தையும் அதைப் பரப்பும் செயலிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. வளர்ந்து வரும் கல்வி முறையில் நூலகங்கள் மையமாக இருந்து கல்விச் சேவை செய்கின்றன. புதிய கல்வி முறைகளான அஞ்சல் வழிக்கல்வி, திறந்தவெளிக்கல்வி போன்றவைகளுக்கு நூலகமே துணையாக இருக்கிறது. அதனோடு நூலகங்களில் கணினியின் மூலம் தகவல் சேகரிப்பதும், பரப்புவதும் முக்கிய சேவையாக இருக்கிறது.

## நூலகத்தின் இயக்கங்களும் அதன் பல்வேறு சேவைகளும்

நூலகம் கலாச்சாரமையமாக இயங்குகிறது. பண்டைய கால தற்கால அறிவே நூல்களில் எழுத்த வடிவம் பெற்றுள்ளதால் அவைகளை தேடிக்கண்டுபிடித்து வாங்கி வரிசைப் படுத்தி தற்கால மற்றும் வருங்கால சந்ததியினர்களுக்கு நூலக சேவையின் வழியாக கலாச்சாரத்தை பரப்புகிறது. வாழ்நாள் முழுவதும் கல்வி கற்க மக்களுக்காக பொது நூலகங்கள், பள்ளி கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நூலகங்கள் அமைந்துள்ளன. தற்காலத்தில் நூலகங்கள் தகவல் மையமாகவும் மக்கள் தொடர்பு மையமாகவும் இயங்குகின்றன. சரியான தகவல்களை சரியான வாசகர்களுக்குச் சரியான நேரத்தில் கிடைக்கும் படி செய்வதே நூலகங்களின் முக்கிய நோக்கமாக விளங்குகின்றன.

## நூலக சிறப்பு இயக்கங்கள்

“மக்களுக்கு வேண்டிய நூல்களை தேர்ந்தெடுத்து வாங்கி அவைகளை மக்களுக்கு கிடைக்கும் படி செய்தல். சரியான நூலை சரியான வாசகர்களுக்கு சரியான நேரத்தில் கிடைக்கும் படி செய்ய சேவை செய்தல். பலபேர் படிக்கும் மிக உயர்ந்த ஆனால் விலை குறைந்த நூல்களைப் பெற்று அதிக பலன்பெறும் படி செய்தல் சாதி, மத பேதமின்றி நிறம், வர்க்கம், மொழி தாழ்ந்தவர், உயர்ந்தவர். ஊனமுற்றோர் எனப் பாகுபாடின்றி நூலகச்சேவையை அளித்தல் ஊனமுற்றோர்களுக்காக சிறப்பு நூல்களை தயாரித்து சேவை செய்தல் உதாரணமாக கண்பார்வை அற்றவர்களுக்காக ‘பிரைலி’ நூல்களையும் ஊனமுற்றோர் படுக்கையிலிருந்தே படிக்க ‘கூரை நூல்கள்’ (Celling Books) தயாரித்து சேவை செய்தல் அதனுடைய பணியாகும்.”

## நூலகவியலின் ஐந்து விதிகள்

**நூல்கள் படிப்பதற்காக**
**ஆளுக்கொரு நூல்**
**நூலுக்கு ஒரு ஆள்**
**காலம் கருதுக**
**நூலகம் வளரும்**

டாக்டர் ரங்கநாதனின் நூலகவியலின் ஐந்து விதிமுறைகளின் படி நூலகங்கள் செயல்படுகின்றன.

## திறந்த அணுகுமுறை

நூலகம் என்பது வாசகர்கள் படிக்கும் நூல்கள் மற்றும் நூலக அலுவலர்களைக் கொண்டு இயங்கும் ஒரு அறிவாலயம். வாசகர்களை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தங்கள் நூல்களுடன் தொடர்பு கொள்ள வைப்பவர்கள் நூலக அலுவலர்களே. நூலக அலுவலர்கள் வாசகர்களுக்கும் நூல்களுக்கும் இடையே தொடர்பு கொள்ள பாலமாக திகழ்கிறார்கள்.

நூலகத்தில் பலவிதப் பிரிவுகளும் அவைகளின் வித்தியாசமான இயக்கங்களும் நூல்வரிசை முறை மேலும் நூலக சேவை, நூலகக் கருவிகள் முதலியன வாசகர்களை திகைக்க வைக்கின்றன. தங்களுக்கு வேண்டிய நூல்களை எவ்வாறு பெறுவது என்பதையும் எங்கு அவைகளைப் பார்க்கலாம் என்ற எண்ணம் வாசக்களுக்கு புதிதாக இருக்கிறது. திறந்த அணுகமுறை என்றால் நூலக நூல்கள் இருக்கும் அறையை திறந்து, வாசகர்களை இங்கு அனுமதிப்பதே திறந்த முறை என்கிறோம். நூல்களை நேரடியாக வாசகர்களே அணுகி தொட்டு அவைகளைத் திறந்து படிப்பதே திறந்த அணுகுமுறை.

சரியான நூல், சரியான வாசகர்களுக்கு சரியான நேரத்தில் தருவதே நூலகத்தின் முக்கியமான நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமெனில் திறந்த அணுகுமுறை அமைப்பு மிகவும் அவசியமாகிறது. வாசகர்களுக்கு தங்கள் விருப்பமான நூல்களைப் பெற உரிமை உண்டு என்பதை திறந்த அணுகுமுறை பறைசாற்றுகிறது.

**வாசகர்களின் கடமை**

நூலகத்தை நன்கு பயன்படுத்துவோர் வாசகர்களே எனவே ஒருநூலகம் நன்கு செயல்பட வேண்டுமெனில் வாசகர்களும் சில கடமைகள் செய்ய வேண்டியதாகிறது. அதாவது வாசகர்கள் தங்கள் சுயநலத்திற்காக நூலகத்தை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. நூலக நூல்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். நூல்களை தன் சொத்தாகக் கருத வேண்டும். பக்கங்களை கிழிப்பதோ, வரிகளை மையால் கோடிட்டுக் காட்டுவதோ தாள்களை மடிப்பதோ செய்யக் கூடாதவைகளாகும். மேலும் நூலகத்தில் அமைதி காத்திடல் வேண்டும்.

நூலக விதிகளையும் செயல்களையும் மதித்து நடக்க வேண்டும். இரவல் வாங்கிய நூல்களை சரியான நேரத்தில் நூலகத்திற்கு திருப்பித் தர வேண்டும். அவ்வாறு செய்வதால் வேறு வாசகர்களுக்கு அவைகள் பயன்படுமல்லவா: மேலும் வாசகர்கள் தங்கள் சமூக அந்தஸ்து. அலுவலக மற்றும் அரசியல் செல்வாக்கு முதலியவற்றால் நூலகத்தின் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கக் கூடாது.

**நூலகம் ஒரு சிக்கன மையம்**

மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் சிந்திப்பதால் இலக்கிய வளர்ச்சியும் பெருகுகிறது. இதன் காரணமாக நூல்களின் அதிகரிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி நூல்கள் பல்கிப் பெருகி வருவதால் ஆய்வாளர்களின் அறிவுத்திறன் அதிகரிக்க வேண்டியதாக உள்ளது. எல்லா நூல்களையும் வாங்கிப் படிக்க பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கிறது.

இதை மனதில் கொண்டு எல்லா நாடுகளும் சிக்கனமாக எவ்வாறு அறிவியல் தொழில் நுட்ப செய்திகளை ஆய்வாளர்களுக்குக் கிடைக்கும்படி செய்வது என ஆய்ந்து முடிவில் தேசிய ஆவண மையங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வித மையங்கள் தங்களிடம் உள்ள அறிவியல் செய்திகளை பரிமாற்றங்கள் செய்து சிக்கன நடவடிக்கை கடைபிடித்துள்ளன. உலகளவில் மற்றும் அரசுகளும் பொது அளவில் செய்திகளை பரிமாற்றிக் கொள்ள நூலக மற்றும் தகவல் மையங்களின் ஒருங்கிணைப்புகளை (Network) ஏற்படுத்தியுள்ளது. தனிமனிதனைப் பொருத்தவரையில், தனக்கு வேண்டிய எல்லா நூல்களையும் வாங்கிப்படிக்க அவன் பொருளாதாரம் இடமளிப்பதில்லை. எல்லா நூல்களையும் படிக்க நேரம் கிடைப்பதில்லை. இதனால் அவனது அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது. இதை அறிந்து எல்லா நாடுகளும் மற்றும் அரசுகளும் பொது நூலகங்களை அமைத்து இலவச தகவல் சேவையை மக்களுக்கு கிடைக்கும்படி செய்து கொண்டிருக்கின்றன.

**நூலகம் ஒரு தகவல் மையம்**

தற்கால நூலகங்கள் மக்களுக்காக வேண்டிய நூல்களை தேடி தேர்ந்தெடுத்து அவைகளை வாங்கி நல்முறையில் அடுக்கி ஒவ்வொரு வாசகருக்கும் கிடைக்கும்படி செய்கின்றன. இச்செயலில் நூலகர்களிடையே மற்றும் நூலகங்களிடையே கருத்து தகவல் பரிமாற்றம் ஏற்படுகிறது. சரியான நூலை வாசகருக்கு சரியான நேரத்தில் கிடைக்கச் செய்ய நூலகர்களும் வாசகர்களும் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியதாகிறது. வழக்கமாக நூலகங்கள் தகவல் தரும் சேவையின் மூலமாக வாசகர்களுக்கு வேண்டிய நூல்களை கிடைக்கும்படி செய்கின்றன. புத்தக இரவல் மூலமாகவும் குறிப்புதவிச் சேவையின் மூலமாகவும், நூற்றொகை நூற்பட்டி கருத்துச் சுருக்கை சேவை போன்ற நூலகச் சேவையை வாசகர்களுக்கு தந்து கொண்டிருக்கின்றன. தற்காலத்தில் நூலகங்கள் பல புதிய சேவைகளை புகுத்தியுள்ளது. ஒவ்வொரு வாசகருக்கும் தனிப்பட்ட முறையில் தொடர் சேவை அளித்திட 1.தேர்ந்தெடுத்த தகவல் விரிவாக்கச் சேவை, 2.புதிய தகவல் விழிப்புணர்ச்சி சேவை, 3.மொழி பெயர்ப்புச் சேவை, 4.நகலெடுக்கும் சேவை, 5.நூற்றொகை மற்றும் கருத்துச் சுருக்க சேவை, 6.ஆவணச் சேவை, 7.கணினி மூலமாகத் தகவல் பரிமாற்றச் சேவை போன்றவைகளை நூலகங்கள் ஏற்படுத்தியுள்ளதால் நூலகங்களை தகவல் மையங்களாக எண்ணலாம்.

## முடிவுரை

டாக்டர் ரங்கநாதன் அவர்களின் நூலகக் கொள்கையின் படி நூலகங்கள் இன்றும் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. நூலகங்கள் நம் வாழ்வில் சிறந்ததொரு இடத்தைப் பிடித்திருக்கிறது. நூலகங்களை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த அறிவாற்றலையும் ஞானத்தையும் பெற முடியும் என்பதில் ஐயமில்லை. நூலகங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையில் சிறந்ததொரு மனிதனாக வாழ வழிகாட்டுகிறது. அத்தகைய நூலகங்களை நாமும் பயன் படுத்தி பயன்பெறுவோம்.